Date : 11.03.2024
O.S No. 101/2016
வா.சா. 1 திரு. கண்ணப்பா சுப்பிரமணியன்
<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 6 , 7 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். மேற்படி விலாசத்தில் உள்ள வீடு சொந்த வீடா வாடகை வீடா என்றால் வாடகை வீடாகும் . எனது பூர்வீகம் நாட்டரசன் கோட்டை ஆகும். நாட்டரசன் கோட்டையில் திருநாவுகரசு தெருவில் தான் எனது பூர்வீக வீடு என்றால் சரிதான்.

2. எனது தகப்பனாருக்கு என்னையும் சேர்த்து 3 ஆண்மக்கள் என்றால் சரிதான்.எனக்கு மூத்தவர் கண்ணப்பன் என்ற திருநாவுகரசு என்றால் சரிதான். என்னுடைய இளைய சகோதரர் இலட்சுமணன் என்ற ராதா கிருஷ்ணன் என்றால் சரிதான் . நாங்கள் நகரத்தார் வகுப்பை சேர்ந்தவர்கள் . எங்கள் சமுதாயத்தில் தாத்தா பெயர் , அப்பா பெயர் விலாசம் குறிப்பிட்டு தான் கையெழுத்து செய்வது வழக்கம் என்றால் சரிதான் . நானும் எனது சகோதரர்களும் KN என்ற விலாசம் இட்டு தான் கையெழுத்து செய்வோம் என்றால் சரிதான். நானும் எனது இளைய சகோதரரும் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்வோம் என்றால் சரிதான்.

3. நாட்டரசன் கோட்டையில் வல்லபாய் பட்டேல் தெருவில் கதவு எண் 5/6 ல் ஒரு வீடும் 27 செண்ட் இடமும் உள்ளது என்றால் சரிதான். அந்த 27 செண்டில் உள்ள வீட்டில் தான் வாதி, வாதியின் தகப்பனார் , வாதியின் தாயார் ஆகியோர் குடியிருந்து வந்தார்கள் என்றால் குடியிருந்து வந்தார்கள் ஆனால் தற்போது இல்லை. 1999 ஆம் வருடம் மேற்படி வீட்டில் தான் வாதி வகையறா குடியிருந்த வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் வாதி நாகராஜன் பிறந்தார் என்றால் சரிதான்.

4. சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No. 153/2015 என்ற வழக்கு வாதியின் தாயார் பேச்சியம்மாள் என்பெயரிலும் என் சகோதரர்களின் பெயரிலும் சட்டத்திற்கு முரணான வகையில் வெளியேற்ற கூடாது என வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் . மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் முன் எங்கள் குடும்பமும் அவரது குடும்பமும் சுமூகமான உறவில் தான் இருந்தது என்றால் சரிதான்.

எனக்கு நாட்டரசன் கோட்டை தவிர பிரண்டை குளம் , சிறுகுளம் , அல்லூார் ஆகிய ஊர்களில் பூர்வீக சொத்துகள் இருந்ததா என்றால் இருந்தது தற்போது இல்லை. மேற்படி பூர்வீக சொத்துக்களில் 3 ல் 1 பங்கு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தையார் ஏற்கனவே பாகம் பிரித்து கொடுத்து விட்டார் . வாய்மொழியாக பிரித்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான்.

5. பிரித்து கொடுத்த சொத்துக்கள் தவிர மீதியுள்ள பூர்வீக சொத்துக்களில் 3 ல் 1 பங்கு எனக்கு பாத்தியம் உண்டு என்றால் சரிதான் . நாட்டரசன் கோட்டையில் வல்லபாய் பட்டேல் தெருவில் கதவு எண் 5/6 ல் உள்ள வீட்டுடன் கூடிய 27 செண்ட் இடத்தில் எனக்கு 3 ல் 1 பங்கு உண்டு என்றால் சரிதான். அந்த 3 ல் 1 பங்கான 9 செண்ட் தான் இந்த வழக்கில் தாவா சொத்து என்றால் சரிதான். 1985 மற்றும் 1986 ல் அட்டை உற்பத்தி செய்யும் கம்பெனி வைத்து நடத்தினேன் என்றால் சரிதான் . அந்த கம்பெனி பெயர் சாய்பாபா இன்டஸ்ட்ரி என்றால் சரிதான்.

6. மேற்படி கம்பெனிக்கு நான் தான் எம் .டி என்றால் சரிதான். அந்த தொழிற்சாலை சம்பந்தமான கரஸ்பான்டன்ஸ்களை நான் தான் கைப்பட எழுதுவேன் என்றால் அப்பொழுது எழுதினேன் , யாருக்கு என்ன எழுதினேன் என்று ஞாபகம் இல்லை . எனக்கு டைரி எழுதும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. எனது கைப்பட எழுதிய கடிதமோ அல்லது வேறுஏதாவது ஆவணங்களோ தற்போது என்னிடம் இருக்கிறதா என்றால் இல்லை . நான் கைப்பட எழுதிய கடிதங்கள் , ஆவணங்கள் என் கைவசம் உள்ளது என்றும் அதை தாக்கல் செய்தால் வழக்கில் பாதிப்பு ஏற்படும் என்று இல்லை என்று மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் சாய்பாபா பக்தன் என்றால் சரிதான் . பொதுவாக ஏதேனும் நல்ல காரியத்தை துவங்கும் போது நான் ஆங்கிலத்தில் OM SAIRAM என்று எழுதுவது வழக்கம் என்றால் இல்லை . என்னுடைய சகோதரர்கள் இருவரும் சிவகங்கை சிப்காட்டில் இன்டஸ்ட்ரி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் முதல் சாட்சியாக உள்ள கையெழுத்து யாருடைய கையெழுத்து என்றால் எனக்கு தெரியாது . அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் ராதாகிருஷ்ணன் சன் ஆப் கண்ணப்ப சீனிவாசன் நாட்டரசன் கோட்டை என்று எழுதப்பட்டுள்ளது.

8. நாட்டரசன் கோட்டையில் வல்லபாய் பட்டேல் தெருவில் கதவு எண் 5/6 ல் உள்ள வீட்டுடன் கூடிய 27 செண்ட் இடத்தில் தாவா சொத்தான 9 செண்ட் காலியிடமாக உள்ளது என்றால் அது தவறு ,27 செண்டும் ஒரே பிளாட்டாக உள்ளது. என்னுடைய பாகம் 9 செண்ட் தனியாகவும் மீதியுள்ள எனது சகோதரர்கள் பாகமான 18 செண்ட் அவர்கள் கற்கால் ஊன்றி வேலி அமைத்து உள்ளார்கள் என்றால் தவறு . 27 செண்டையும் சுற்றி காம்பவுன்ட் உள்ளதா என்றால் வடக்கு பக்கம் சுற்று சுவர் உள்ளது, கிணறு ஒன்று உள்ளது , கிழக்கும் மேற்கும் சுற்றுச்சுவர் விழுந்து விட்டது.

9. 1999 ல் எனது சகோதரர் ராதா கிருஷ்ணனின் மனைவி உமையாள் நாட்டரசன் கோட்டை பேரூராட்சி தலைவராக இருந்தார் என்றால் ஆமாம் ஆனால் எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை . உமையாள் பேரூராட்சி தலைவராக இருந்த போது ஞான சேகரன் என்பவர் துணை தலைவராக இருந்தார் என்றால் சரிதான் . நான் தாவா சொத்தான 9 செண்டை செண்ட் ஒன்றுக்கு ரூ. 15,000/- வீதம் 9 செண்டுக்கு ரூ. 1,35,000/- நிர்ணயம் செய்தும் அதிலுள்ள கிணற்றிற்கு ரூ . 15,000/- நிர்ணயம் செய்தும் மொத்த கிரைய தொகை ரூ 1,50,000/ நிர்ணயம் செய்து 25.04.1999 ல் அட்வான்ஸாக ரூ25,000/- ஐ வாதியிடம் ரொக்கம் பெற்று கொண்டு அதற்கான ரசீதும் அதனை தொடர்ந்து பாக்கி கிரைய தொகை ரூ 1,25,000/- ஐ பிரமாதி வருடம் ஆனி மாதம் 30 ம் தேதிக்குள் செலுத்தி வா .சா.ஆ 1 கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் பொய். வா.சா.ஆ 1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.

10. கிரைய பாக்கி தொகையை பல தவணைகளில் தாங்கள் வாதியிடம் ரொக்கமாகவும் வங்கி மூலமாகவும் பெற்று கொண்டு வா .சா.ஆ 1 ல் மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளேன் என்றால் இல்லை . ஒவ்வொரு மேற்குறிப்பிலும் எனது கையெழுத்து உள்ளது என்றால் இல்லை . வாதி நாகராஜன் அவரது தொழில் மற்றும் குடும்ப செலவுகளுக்காக என்னிடம் வாங்கிய கடனை வங்கி மூலம் திரும்ப கொடுத்துள்ளார் அது கிரைய தொகைக்காக கொடுக்கப்பட்டது அல்ல . வாதி என்னிடம் கடன் எந்த காலத்திலும் வாங்கியதில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி எவ்வளவு கடன் வாங்கினார் எப்போது வாங்கினார் என்பதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை , நம்பிக்கையின் பேரில் கைமாற்றாக கொடுத்ததாகும். என்னிடம் கடன் கொடுக்க கூடிய வசதி இல்லை என்றால் சரியல்ல.

11. என்னிடம் பலமுறை வாதி கிரைய பத்திரம் எழுதி தர சொன்னதற்கு இன்னும் ரூ 50,000/- கொடுத்தால் தான் பத்திரம் எழுதி தருவதாக நான் கூறினேன் என்றால் சரியல்ல . அது சம்பந்தமாக முக்கியஸ்தர்களை வைத்து பேசியதில் வாதி ரூ 10,000/- கொடுத்து அதை நான் 02.02.2015 ல் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல . நான் மொத்த கிரைய தொகையாக ரூ 1,60,000/- பெற்று கொண்டு வாதிக்கு கிரைய பத்திரம் எழுதி பதிந்து கொடுக்காமல் இருந்ததால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணம் எழுதி கொடுத்து விட்டு தற்போது இவ்வழக்கிற்காக எழுதி கொடுக்கவில்லை என்று வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

12. என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற வழக்கு கோப்பில் உள்ள வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரை ஆகியவற்றிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான் . அதிக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ 1 ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.03.11 19:49:10 +0530